R4900

# WHAT THE CHURCH SACRIFICES
# சபை எதை பலியிடுகிறது

பலி என்ற வார்த்தை வேத வாக்கியங்களில் இரண்டு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவது தேவனுடைய சித்தம் நம்மில் நிறைவேற நம்முடைய சித்தத்தை அர்ப்பணிப்பதை குறிக்கிறது; இரண்டாவது மகா பிரதான ஆசாரியரின் வேலையை குறிப்பிடுகிறது. அவரிடம் நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். அந்த அர்ப்பணத்தை அவர் தேவனுக்கு பிரியமானதாக ஆக்குகிறார். முதன்மையாக நாம் பெற்றிருக்கிற பூமிக்குரிய உரிமைகள், சலுகைகள் மற்றும் சந்தர்ப்பங்களை பலியிடுகிறோம். ஏனெனில் இவைகளைத்தான் நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் சிலவற்றை விசுவாசத்திற்காக கொடுக்கிறோம். ஆயிரம் வருட யுகத்தில் மனுக்குலம் முழுவதும் பரிபூரணத்தை திரும்ப பெறுகிற சலுகையை பெறக்கூடிய ஒரு ஏற்பாட்டை தேவன் செய்திருக்கிறார் என்று நாம் விசுவாசத்தினால் நம்புகிறோம்; விசுவாசத்தினால் திரும்பப் பெறுகிற சலுகைகளில் நமது பங்கை விட்டுவிடுகிறோம் அல்லது கை விடுகிறோம். இவ்விதமாக விட்டுவிடுகிற நமது கொள்கை நாம் பெற்றிருப்பதை அர்ப்பணித்தல் ஆகும். இரண்டாவதாக நாம் விட்டுவிடுவது தேவனுடைய மாபெரும் திட்டத்தில் விசுவாசத்தினால் நாம் பெற்றிருப்பதை விட்டுவிடுதல் ஆகும்.

எனினும் அப்போஸ்தலர் உபதேசிப்பது போல, பலி கொடுப்பதற்காக வருகிற மறுசீரமைப்பு ஆசீர்வாதங்களுக்கு பாராட்டுதலை பெறுவது ஒருவருக்கு அவசியமில்லை. (ரோமர்12:1) மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்களை பற்றிய அறிவு மீட்கும் பொருளின் அறிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மற்றவர்கள் இதை பற்றிய தெளிவான அறிவைப் பெற்றிருக்கவில்லை என்பதை நாம் காண்கிறோம். கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணினவர்கள் அவர்கள் பெற்றிருக்கிற அனைத்தையும் விட்டுவிட்டபடியால் இது மறுசீரமைப்பையும் உள்ளடக்கியதாகும். அறுப்புக்கு முன்பாக வாழ்ந்த பரிசுத்தவான்கள் மறுசீரமைப்பு பற்றிய இந்த அறிவு இல்லாதிருந்தாலும் இரட்சகர் மேலிருந்த விசுவாசத்தின் மூலம் பிரியமான பலியை செலுத்தினார்கள்.

விரும்பிக் கொடுத்தல், பலி, அர்ப்பணம் முதலான வார்த்தைகள் சில சமயங்களில் வேறுபாடான அர்த்தங்களை கொண்டுள்ளன. உதாரணத்திற்கு, பிரதான ஆசாரியன் பலிகளை செலுத்தினார் என்று வாசிக்கிறோம். நாமும் நம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறோம். பலி செலுத்துதல் என்பதற்கும் ஜீவ பலியாக நம்மை ஒப்புக்கொடுக்கிறோம் என்பதற்கும் நாம் வித்தியாசத்தை காண்கிறோம். அவைகளை சமர்ப்பிப்பதைக் காட்டிலும் வேறு எதுவும் செய்ய முடியாது. இரண்டு வெள்ளாட்டுக்கடா கொண்டு வரப்பட்டு ஆசாரிப்புக் கூடாரத்தின் கதவில் கட்டப்படுவது அடையாளமாக காட்டப்படுகிறது. இந்த பொருளில் நாம் பலி செலுத்துகிறோம். அதாவது நமது சித்தத்தையும் அனைத்து உரிமைகளையும் விட்டுவிடுகிறோம். நம்மிடமிருந்து பலியை ஏற்றுக்கொள்ளும் காரியத்தில் பரலோக பிதாவானவர் மீட்பரின் மூலம் அல்லாமல் நம்மிடம் நேரடியாக தொடர்பு கொள்ளுவதில்லை. நமது மகா பரிகாரி நமது பலியுடன் அவரது பலியின் புண்ணியத்தை சாட்டுதல் பண்ண தயாராயிருந்தார். பிரதான ஆசாரியர், தேவனுடைய பிரதிநிதி அதை பலியிட்டார். நாம் நம்மை முன்னரே அர்ப்பணித்து விட்டோம். பிரதான ஆசாரியன் பலியை ஏற்றுக்கொண்டு மெய்யான வெள்ளாட்டுக் கடாவை கொல்ல ஆரம்பித்த போது நமது பலி நிறைவேறியது. ஆனால் இது படிப்படியான வேலை, நிழலில் பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக் கடாவை கொல்லும் போது உடனே பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஆனால் இரத்தமானது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்படும் வரை பலியானது உண்மையிலேயே நிறைவடையாது. உண்மைப் பொருளிலும் அது போல் தான்.

### அர்ப்பணத்தின் போது நமது வேலை நிறைவடையவில்லை

நமது கர்த்தர் சபையின் பலியின் வேலையை ஏதோ ஒரு வழியில் சுவிசேஷ யுகம் முழுவதிலும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலை நாம் பெற்ற பொழுது நாம் புது சிருஷ்டிகளானோம். இந்த உண்மையான மரணமும், “இடுக்கமான வழியில்” அனைத்து பாடுகளும், கர்த்தரின் வழிநடத்துதலில் தொடர்ந்து செல்லுதல் அனைத்தும் நமது பலியின் பாகங்களாகும். நமது சித்தத்தை பலியிடும் போது, வேறு சிந்தையை உபசரிக்கக்கூடாது. எனது பங்கை நாம் செய்துவிட்டேன். மீதியானவற்றை மகா பிரதான ஆசாரியர் செய்யட்டும்! இது சரியான எண்ணம் அல்ல. எந்த சமயத்திலும் நமது சித்தத்தை நிறுத்தி, நமது அர்ப்பணிப்பையும் நிறுத்திவிடுவோம். எந்த சமயத்திலும் நாம் உட்கார்ந்து “நாம் நிம்மதியாக இருப்போம்” என்று கூறலாம். நாம் அப்படி செய்யக்கூடாது. நாம் கிறிஸ்துவின் பாடுகளை பூர்த்தி செய்ய தொடரவேண்டும்.

நாம் அர்ப்பணம் பண்ணின போது எல்லாம் முடிந்து விடவில்லை. அப்பொழுது நமது விருப்பங்களையும் உரிமைகளையும் விட்டுவிட்டோம். உலகத்திற்கு மரித்து தேவனுக்கு ஜீவிக்கிற அந்த மகா பெரிய கிருபையின் ஒப்பந்தம் தேவைப்படுகிறது. “ஏனென்றால் எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாக பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு செல்லப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்கு புறம்பே சுட்டெரிக்கப்படும்” என்று அப்போஸ்தலர் இது குறித்து கூறுகிறார். (எபிரேயர் 13:11) ஒரு பொருளில் ஆடானது மரித்துவிட்டது. நமது அனுபவங்கள், உண்மையான பாடுகளையும் பாளையத்துக்கு புறம்பே செல்வதையும் குறிக்கிறது. மாம்ச பிரகாரம் நாம் மரித்தவர்களாக எண்ணப்படும் போது இவை அனைத்தும் நமக்கு நேரிடுகிறது.